வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி– 620002

# ஜெகசிற்பியன் வாழ்வும் எழுத்துப் பணிகளும்

**தா. மேரி மார்டீனா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத் துறை)
தூய வளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச் சுருக்கம்:**

வரலாற்றுப் பெருமையும் செம்மொழிச் சிறப்பும் மிக்கது தமிழ் மொழி.தனிநாயக அடிகள் தமிழ் மொழியைப்‘பக்தி மொழி’ என்றார். அதற்கிணங்க தமிழகத்தில் வந்து ஆண்ட இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சமணர்கள், பௌத்தர்கள் போன்றோர் தங்கள்சமயப் பாடல்கள் வழியாகத்தமிழ் மொழிக்குப் பல்வகைகளில் வளம் சேர்த்தனர். சமயம் பரப்ப வந்த மேலைநாட்டுக் கிறித்தவர்கள் தங்கள் கிறித்தவ சமயத்தின் கோட்பாடுகள், தத்துவங்கள், நம்பிக்கைகள், வழிபாடு போன்றவற்றைத் தமிழ் மக்களுக்கு எடுத்துரைக்க தமிழ் மொழியைப் பயன்படுத்தினர். தமிழகத்தில் இருந்து கொண்டேதமிழ் இலக்கியங்கள் வழி மொழியை வளர்த்த கிறித்துவத் தமிழ் எழுத்தாளர்களுள் ஜெகசிற்பியன் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**முன்னுரை:**

சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, அரசியல், சமயநிலை முதலானவற்றைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்வது இலக்கியம். சங்க காலப் புலவர்கள் தொடங்கி இக்கால எழுத்தாளர்கள் வரை தமிழ் மொழிக்குத் தனது படைப்புகள் வழி தொண்டுகள் செய்துள்ளனர். கிறித்தவ சமயம் பரப்புவதற்காகத் தமிழகம்வந்த சமயவாதிகள் தமிழ் மொழி மீது கொண்ட ஈர்ப்பினால் இலக்கியங்களைப் படைத்தனர். அவர்களைப் பின் தொடர்ந்து

கிறித்தவ சமயத்தைத் தழுவி கிறித்தவராக வாழ்ந்தவர்களில் சிலர் சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தனர். அவர்களுள் எழுத்தாளர் ஜெகசிற்பியன் குறிப்பிடத் தகுந்தவர். அவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.

**தமிழகக்கிறித்தவர்கள்:**

சமயம் பரப்ப வந்த மேலைநாட்டுக்கிறித்தவர்கள்மொழிமீது கொண்ட பற்றினால் தெளிவுறக் கற்றனர். பின் சமயம் பரப்புவதற்குத் தமிழ் மொழியைப் பயன்படுத்தியதோடு அல்லாமல் இலக்கிய இலக்கணங்களையும் தமிழில் உருவாக்கினர். அவர்களுள் இன்றளவும் தமிழ் இலக்கிய வரலாற்றில் நீங்கா இடம் பிடித்தவர்கள் வீரமாமுனிவர், சீகன் பால்கு ஐயர், கால்டுவெல், ஜி.யு.போப் போன்றோர் ஆவர். தமிழில் உரைநடை நூல் ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்டது ஆகும். "கி.பி 1577 ஆம் ஆண்டில் தான் தமிழில் முதன் முதலில் உரைநடை நூல் உண்டானதாகத் தெரிகிறது. அந்த நூலுக்கு 'கிறித்தவ வேதோபதேசம்' என்பது பெயர். இயேசுவின் சபை பாதிரிமாரால் எழுதி அச்சிடப்பட்ட இந்த முதல் தமிழ் உரைநடை நூல் இப்போது இந்தியாவில் இல்லை என்று தெரிகிறது."(மயிலை சீனி.வேங்கடசாமி (2000), ப.31) மேலைநாட்டார் தமிழுக்குச் செய்த இலக்கியப் பணியினைத் தொடர்ந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறித்தவர்கள் தமிழ் இலக்கியங்களைப் படைத்தனர். அவர்களுள் எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை,வேதநாயக சாஸ்திரியார், தனிநாயகம் போன்றவரைக் குறிப்பிடுவர். நவீன இலக்கியங்களைப் படைப்பதில் நிர்மலா சுரேஷ் வலம்புரிஜான்,வி.லீமா ரோஸ், சி.மணிவளன் சே. ச, அ. லூர்துசாமி சே.ச, ஜெகசிற்பியன், கேத்தரின் ஆரோக்கியசாமி போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர்.

**பிறப்பும் வாழ்வும்:**

ஜெகசிற்பியன் 1925ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் தேதி பொன்னப்பா எலிசபெத் இணையருக்கு மகனாக மயிலாடுதுறையில் பிறந்தார். பெற்றோர்

அவருக்கு இட்ட பெயர் பாலையன்.1939 ஆம் ஆண்டு முதன் முதலில் அவர் கதை ‘நல்லாயன்’ இதழில் வெளிவந்த போதும் அதனைத் தொடர்ந்து சில இதழ்களில் கதைகள் எழுதிய போதும் தஞ்சை ஜெர்வால், பாலையா என்ற பெயரில் எழுதினார். சென்னை ஓவியக் கல்லூரியில் ஓவியமும் தொழிற்கல்வி நிலையத்தில் பயிற்சியும் பெற்றார். கவியோகி சுத்தானந்த பாரதியார் தன்னுடைய புதினத்தில் சேக்ஸ்பியரை ‘செகப்பிரியர்’ என்று பெயரிட்டு இருந்தார். அதனால் தனது பெயரை ‘ஜெகசிற்பியன்’ என்ற பெயரில் புனைபெயராக மாற்றிக் கொண்டார். இலக்கிய நண்பர்கள் இவரை ‘ஜெசி’ என்றுதான் அழைத்தனர். இவரது மனைவி தவசீலி. அஜந்தா, வசீகரி, ஏழிசைவள்ளி என்ற மூன்று மகள்கள் உள்ளனர்.‘ஊமத்தப் பூக்கள்’ என்ற புதினத்தை எழுதிக் கொண்டிருக்கும்போது 1978 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் இவ்வுலகை விட்டு உயிர் துறந்தார். இவர் மறைவுக்குப் பிறகு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் ‘திரு.வி.க பரிசு’ மற்றும் ரூபாய் ஐந்தாயிரம் தமிழக அரசால் ஜெகசிற்பியன் குடும்பத்திற்கு வழங்கப்பட்டது.

**எழுத்துப்பணி:**

1939இல் ‘நல்லாயன்’ இதழில் தனது 15 வது வயதில் ‘சுந்தரனின் சோபணம்’ என்ற சிறுகதையை முதன் முதலில் எழுதி பெருமை பெற்றார்.1948ல் ‘ஏழையின் பரிசு’ என்ற முதல் புதினத்தை எழுதினார்.1958ல் ‘அக்கினி வீணை’ என்ற 17 சிறுகதைகள் கொண்ட சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். இவருடைய 154 சிறுகதைகள் 12 தொகுதிகளாகவும் இரு குறு நாவல்கள் இரு தொகுதிகளாகவும் வெளிவந்துள்ளன.16 சமூகப் புதினங்களை எழுதி இருக்கிறார்.‘தமிழ் நேசன்’ என்ற மலேசிய நாளிதழில் இவர் எழுதிய ‘மண்ணின் குரல்’ சமூகப் புதினம் தனி நூலாக வெளிவந்துள்ளது.‘ஜீவகீதம்’ தொடர் புதினத்தை 1967 ஜனவரி 17 முதல் ‘கல்கி’ இதழில் எழுதினார். இப்புதினம் 13 இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.‘கொஞ்சும் சலங்கை’ திரைப்படத்திற்கு இவர் உரையாடலும் எழுதியுள்ளார்.

**இதழியல் பணி:**

ஜெகசிற்பியன் அவர்கள் சிறந்த எழுத்தாளராக இருந்ததோடு இதழ்களை நடத்தி சிறந்த இதழாசிரியராகவும் திகழ்ந்திருந்தார். சிற்பி, சுதந்திரதேவி, சீர்திருத்தம், சிரஞ்சீவி, இன்பக் கலை ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார். தம்முடைய இதழ்களில் அரசியல் கதைகள், கட்டுரைகள், கவிஞர்கள் பற்றிய குறிப்புகள், அறிவியல் கதைகள் போன்றவற்றை வெளியிட்டார்.

**கல்வி நிலையங்களில் பாடமும் ஆய்வும்:**

‘நொண்டிப்பிள்ளையார்’,‘அவன் வருவான்’ ஆகிய சிறுகதைகள் சென்னைப் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு, உயர்நிலைப் பள்ளிக் கல்வி ஆகியவற்றில் பாடமாக வைக்கப் பெற்றன. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் இவருடைய ‘ஆலவாயழகன்’ என்ற வரலாற்றுப் புதினத்தையும் ‘நடைஓவியம்’ என்று ஓரங்க நாடகத் தொகுப்பையும் முதுகலை வகுப்பிற்குப் பாடமாக வைத்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் முதுகலை வகுப்பில் ஜெகசிற்பியன் சிறுகதைகள், வரலாற்று புதினங்கள் பற்றிய ஆய்வைச் செய்துள்ளனர். அமெரிக்க பென்சில்வேனியா பல்கலைக்கழகம் தெற்காசிய மொழியியல் ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த திராவிட மொழிகள் ஆராய்ச்சித் துறையினர் ஜெகசிற்பியனின் சிறுகதைகள், சமூகப் புதினங்கள் போன்றவற்றை ஆராய்ச்சி செய்துள்ளனர்.

**ஆசிரியரின் சிறுகதைத் தொகுதிகள்:**

- அக்னி வினை (1958)
- ஊமைக்குயில் (1960)
- நொண்டிப் பிள்ளையார் (1961)
- நரிக்குறத்தி (1962)
- ஞானக்கன்று (1963)
- மதுர பாவம் (1967)
- நிழலின் கருப்பு (1969)

- அஜனம் (1972)
- ஒரு பாரத புத்திரன் 1974

சமூக நாவல்கள்:

- ஏழ்மையின் பரிசு (1948)
- சாவின் முத்தம் (1949)
- கொம்புத்தேன் (1951 )
- தேவ தரிசனம் (1962)
- மண்ணின் குரல் (1964)
- காணக் கிடைக்காத தங்கம் (1977)
- இனிய நெஞ்சம் (1978)
- சொர்க்கத்தின் நிழல் (1978)
- இன்று போய் நாளை வரும் (1979)
- இந்திர தனுசு (1979)

வரலாற்று நாவல்கள்:

- மதுராந்தகி (1955)
- நந்திவர்மன் காதலி (1958)
- மாதம் பாதை (1964)
- சந்தன திலகம் (1969)
- கோமகள் கோவிலை (1976)

**வரலாற்று நாவல்களின் சிறப்பு:**

எழுத்தாளர்கள் தங்களின் படைப்புகளில் வரலாற்று நிகழ்வுகளைப் பதிவிடுவர். ஜெகசிற்பியன் தனது வரலாற்று நாவல்களில் பழங்காலத்தில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னர்களைப் பற்றியும் அவர்கள் ஆட்சி செய்த திறத்தையும் அவர்களின் கலைநுட்பத்தையும் எழுதியுள்ளார்.'பத்தினிக் கூட்டம்' நாவல் வழி பல்லவர் காலத் தமிழகத்தையும் அரசியல் நெருக்கடியையும் படைத்துக் காட்டியுள்ளார். தமிழ் வாழத்தான் வாழ்ந்து தன் உயிர் ஈந்த நந்திவர்மன்

வரலாற்றை 'நந்திவர்மன் காதலி' நாவலில் எழுதியுள்ளார். பல்லவர்கள் ஓவியம், இசை, சிற்பம், கட்டிடம் ஆகியக் கலைகளில் தன்னிகரற்று திகழந்ததை'மகரயாழ் மங்கை' நாவல் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

**வாழ்வியல் கூறுகள்:**

சிறுகதை என்னும் இலக்கியம் வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சியை ஒன்று இரண்டு கதாபாத்திரம் வழி விளக்குவதால் அத்தகைய சிறுகதைகள் சமூகத்தில் மக்களின் எதார்த்த வாழ்க்கைச் சூழலை மையப்படுத்தியதாக இருக்கும்.பிராங் ஒ கானர் "சிறுகதை என்பது பிரச்சனைகளை அலசிடும் படைப்பன்று. பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகளைக் கொண்டதன்று. அது மனித சூழமைவு பற்றி உள்ளவாறு கூறுவதாகும்"(மு. அருணாசலம், இராஜா வரதராஜா (2012), ப.375) என்கிறார். மனிதன் வாழ்ந்த சூழலை எதார்த்த உண்மையுடன் அப்படியே எழுதியவர் ஜெகசிற்பியன்.இவரது படைப்புகள் அனைத்தும் இன்றைய சமுதாயத்திற்கும் எதிர்காலத்திற்கும் நிறைவு தரும் வகையில் இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கோடு இருந்தன.

இவரது 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' என்ற படைப்பு நாம் வாழும் சமுதாயத்தின் சீர்கேடுகள் அத்தனையும் படம் பிடித்துக் காட்டுவதாக அமைத்துள்ளார். ஏழைகள் இப்பிறவியில் வறுமையில் இருந்தாலும் அவர்களுடைய பண்புகள் ஒருபோதும் உயர்ந்த நிலையில் இருந்து மாறிவிடுவதில்லை என்ற கருத்தைத் தம் படைப்புகளில் பதிவு செய்து வந்துள்ளார். குடும்பம் என்பது ஒரு பெரிய நிறுவனம் என்பதையும் 'மோகமந்திரம்' என்னும் புதினத்தில் சித்திரித்துள்ளார். மேலும் இவருடைய சமுதாய புதினங்களில் வறுமை, அடிமைத்தனம், சமுதாய சீர்கேடுகள் போன்ற பலவற்றைப் பேசியவர்.

பெண்ணிய சிந்தனைகளையும் தனது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார்."ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான தாகங்கள் ஐந்து.

அவை அறிவு, பணம், பதவி, புகழ், மோகம். இவற்றிற்கு மேலாக ஆறாவது தாகமாக விளங்குவது தன்மானத்தைக் காப்பதற்கெனக் கிளர்ந்தெழுவது. அப்போது ஒரு பெண் இவ்வுலகையும் அழிக்கத் தயங்காள் என்பதைக் கருவாகக் கொண்டது 'ஆறாவது தாகம்' என்னும் நாவல்." "(இர. ஆரோக்கியசாமி , ப.312) அரசியல் ஆதிக்கம், எல்லைப் பிரச்சனைகளின் கொடுமை போன்றவற்றையும் தயங்காமல் தன் படைப்புகளில் பேசியவர்.

**முடிவுரை:**

உலகத்தில் வரலாற்றுப் பின்னணியுடன் திகழும்சமயங்களில் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படும் கிறிஸ்தவ சமயம். அத்தகைய கிறிஸ்தவ சமயத்தைத்தழுவி தமிழ் இலக்கியத்தில் களம் கண்டவர்களில் தனக்கொரு இடத்தைப் பிடித்தவர் ஜெகசிற்பியன். தனது படைப்புகள் வழி சமூகத்தில் நிலவும் பிரச்சனைகளைப் பேசியவர். அவரின் வாழ்க்கை வரலாறும் தமிழுக்குச் செய்த எழுத்துப் பணிகள் குறித்து இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**துணை நின்ற நூல்கள்:**

1. அருணாசலம் மு இராஜா வரதராஜா - தமிழ் இலக்கிய வரலாறு
அருண் பதிப்பகம்,
தரைத்தளம் 'C' பாலாஜி பிளாக்,
SBI காலனி, கண்டோன்மெண்ட்,
திருச்சி - 1

2. ஆரோக்கியசாமி இர -கிறித்தவ இலக்கிய வரலாறு
பூரண ரீத்தா பதிப்பகம்,
1130 பழனியப்பா நகர் 3வது தெரு,
நாஞ்சிக்கோட்டை சாலை,
தஞ்சாவூர் - 613 006

3. சீனி வேங்கடசாமி மயிலை -கிறித்துவமும் தமிழும்
மெய்யப்பன் தமிழாய்வகம்,
53, புதுத்தெரு,
சிதம்பரம் - 608 001